(2019)5 எஸ்.சி.ஆர். 569

ராஜஸ்தான் மாநில அரசு

–எதிர்–

கண்ஹையா லால்

(குற்றவியல் மேல்முறையீடு எண் 645/2019)

ஏப்ரல் 10, 2019

[மாண்புமிகு நீதியசர் திரு. எல் நாகேஸ்வர ராவ்

மற்றும்

மாண்புமிகு நீதியசர் திரு. எம் ஆர் ஷா]

இந்திய தண்டனைச் சட்டம், 1860 – பிரிவுகள் 302 மற்றும் 304 பகுதி I – கொலை – பலியானவர் குற்றம் சாட்டப்பட்டவரால் கோடரியால் அவரது தலையில் தாக்கப்பட்டு, காயமுற்றார் – விசாரணை நீதிமன்றம் இ.த.ச. பிரிவு 302–இன் கீழான தண்டிக்கத்தக்க குற்றத்திற்காக எதிரியை குற்றவாளி என தீர்மானித்து, தண்டனை அளித்தது, ஆயினும், எதிரி பலியானவரின் தலையில் கோடரியால் தாக்கி ஒரே காயம் ஏற்பட்டதன் காரணமாக அவர் இறந்தார் என்ற காரணத்தின்பேரில் சட்டப் பிரிவு 304 பகுதி I

–இன் கீழ் உயர் நீதிமன்றம் அதை மாற்றியமைத்தது ; மேலும் தொடர் காயங்கள் ஏற்படவில்லை; மேலும் பாதிக்கப்பட்டவர்க்கும் குற்றம் சாட்டப்பட்டவர்க்கும் வாக்கு வாதம் ஏற்பட்டதாகவும், குற்றம் சாட்டபட்டவருக்கு எந்த உட்கருத்தும் இல்லை என்பதாகும் – இதில் இலையீடு இருந்தது – முடிவு; உயர் நீதிமன்றம் தண்டனையை இ.த.ச. பிரிவு 302–இல் இருந்து பிரிவு 304 பகுதி I க்கு மாற்றியமைக்கும்போது உயர் நீதிமன்றத்தால் அளிக்கப்பட்ட காரணம் வெளிப்படையாகவே முறைத்திறம்பியது மற்றும் பதிவுறுக்களின் ஆவணங்கலுடன் முற்றிலும் முரணானது – பிரேத பரிசோதனையை நடத்திய மருத்துவர், மேற்சொன்ன தலையில் ஏற்பட்ட காயமானது இயல்பான போக்கில் மரணத்தை விளைவிப்பதற்கு போதுமானது என குறிப்பிட்டார் – கொடிய ஆயுதமான கோடரி போன்றவற்றை கொண்டு முக்கிய உறுப்பான தலையில் பலமாக ஒரு அடிகொடுத்தால், மரணம் ஏற்படும், அதுவே பிரிவு 300–இன் கீழ் கொலை வழக்கு என்று முடிவு செய்ய போதுமானதாக உள்ளது – வாய்சண்டை முன்னரோ ஏற்பட்டிருக்கும் என்றும், குற்றம் நடப்பதற்கு முன்னரோ அல்லது குற்றம் நடந்த நேரத்திலோ அல்ல என்பதால் மட்டுமே,

இறந்தவருக்கு மரணத்தை ஏற்படுத்தும் உட்கருத் குற்றம் சாட்டப்பட்டவருக்கு இல்லை என்று அனுமானிக்க முடியாது – எனவே பிரிவு 302– லிருந்து பிரிவு 304 பகுதி I ஆக தண்டனையை மாற்றியமைத்ததில் உயர் நீதிமன்றம் தவறு இழைத்தது – உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு ரத்து செய்யப்பட்டு, விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்பு மீட்டளிக்கப்படுகிறது.

1.1 தண்டனையை இ.த.ச பிரிவு 302–ல் இருந்து இ.த.ச பிரிவு 304 பகுதி I–க்கு மாற்றியிமைக்கும் பொழுது, உயர் நீதிமன்றத்தால் அளிக்கப்பட்ட முக்கிய காரணவிளக்கம் யாதெனில், ஒரே அடி அளித்தது குறித்ததாகும், குற்றஞ்சாட்டப்பட்டவர் இறந்தவரின் தலையில் கோடரியால் ஒரே அடி கொடுத்ததன் காரணமாக அவருக்கு காயம் ஏற்பட்டு இறந்துவிட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. மேற்கூறியவை இ.த.ச பிரிவு 302–ல் இருந்து 304 பகுதி I–க்கு தண்டனையை மாற்றுவதற்கான ஒரு காரணமாக இருக்க முடியாது. மேற்கூறிய தீர்ப்புகளில் இந்த நீதிமன்றம் வகுத்துள்ள சட்டத்தை தற்போது உள்ள வழக்கின் பொருண்மைகளுக்கு பயன்படுத்தியும், பிரிவு 302–இல்

இருந்து பிரிவு 304 பகுதி I–க்கு மாற்றும்போது உயர்நீதிமன்றம் வழங்கிய நியாயங்கள் மற்றும் எதிர்ப்புக்குள்ளான இறுதி தீர்ப்புரை மற்றும் உத்தரவு பத்தி 15–ல் கூறப்பட்டுள்ள காரணங்களை வைத்தும், உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பு வெளிப்படையாக முறைதிறம்பியது, மற்றும் பதிவுறுக்களிலிருந்து முற்றிலும் முரணானது என்று நாங்கள் உறுதியாக கருதுகிறோம்.தலையில் ஏற்பட்ட காயம் இயல்பான முறையில் மரணத்தை ஏற்படுத்த போதுமானது என்றும் அவர் கூறினார். எனவே, குற்றம் சாட்டப்பட்டவர், உடலின் முக்கிய பகுதியான தலையில் கொடிய ஆயுதமான கோடரியை பயன்படுத்தி பலமாக அடித்ததால் மரணம் ஏற்பட்டது என்பது நிரூபிக்கப்பட்டது. [பத்தி6.2,7] [575–இ; 576–ஜி–எச்; 577–பி–சி]

அருண் ராஜ் எதிர் இந்திய ஒன்றிய அரசு (2010)6 எஸ்.சி.சி 457: [2010]7 எஸ்.சி.ஆர் 1; அசோக்குமார் மகபாய் வங்கர் எதிர் குஜராத் மாநில அரசு (2010)10 எஸ்.சி.சி 604; ராஜஸ்தான் மாநில அரசு எதிர் லீலா ராம் என்கிற லீலா தார் 2019(1) ஸ்கேல் 544 – சார்ந்தது.

விஜய் ராமகிருஷ்ணன் கேய்க்வாட் எதிர் மகாராஷ்டிரா (2012)11 எஸ்.சி.சி 592 – குறிப்பிடப்பட்டது.

1.2 உயர் நீதிமன்றம் கூறிய மற்றொரு காரணம் என்னவென்றால் மீண்டும் மீண்டும் காயம் ஏற்படவில்லை என்பதாகும். தண்டனையை இ.த.ச பிரிவு 302–ல் இருந்து பிரிவு 304 பகுதி I–க்கு மாற்றுவதற்கு மேற்கூறியவை அரிதான காரணமாகவே இருக்க முடியும். தலை போன்ற உடலின் முக்கிய பாகத்தின் மீது அடித்த ஒரு அடி, அதுவும் கொடிய ஆயுதமான கோடரியை பலமாக பயன்படுத்தப்பட்ட என்பது மரணத்தை நிரூபித்தது மற்றும் இ.த.ச பிரிவு 300–ன் வரையறைக்குள் இது ஒரு கொலை வழக்கு என்று கருத போதுமானதாகும்.பகுதி 8][577–சி.டி]

1.3 உயர் நீதிமன்றம் வழங்கிய மற்றொரு காரணம் என்னவென்றால், சம்பவத்தன்று காலையில், குற்றம் சாட்டப்பட்டவருக்கும் இறந்தவருக்கும் இடையே வாய்ச்சண்டை ஏற்பட்டது. எனவே வழக்கின் சூழ்நிலையில் மரணத்தை ஏற்படுத்தும் உட்கருத்து ஏதும் இல்லை என்று குற்றம் சாட்டப்பட்டவரின் தரப்பில் கூறலாம். ஆனால் மரணம் எதனால் ஏற்பட்டது என்ற உண்மை மரணத்தை ஏற்படுத்தக்கூடிய உடல் காயத்தை ஏற்படுத்தும் நோக்கத்தை

நிலைநிறுத்துவதாக தோன்றுகிறது. மேற்கூறியவை பதிவில் உள்ள சான்றுகளுக்கு முரணானது. குற்றம் நடந்த போது குற்றம் சாட்டப்பட்டவருக்கும் இறந்தவருக்கும் இடையே வாய்ச்சண்டை ஏற்பட்டது என்பது குற்றம் சாட்டப்பட்டவர் சார்பாக ஒரு வழக்கு அல்ல என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். வாய்ச்சண்டை ஏதேனும் இருந்தால், காலையிலும் சம்பவம் நடந்த நேரத்தை விட மிகவும் முன்னதாகவும் நடந்துள்ளது. இந்த தகராறு மிகவும் முன்னதாகவே நடந்திருக்க கூடும் என்பதாலும், அதற்கு உடனடியாக முன் மற்றும் அல்லது குற்றம் நடந்த சமயத்திலும் அல்ல என்பதால், இறந்தவருக்கு மரணத்தை விளைவிக்க குற்றம் சாட்டப்பட்டவருக்கு எந்த உட்கருத்தும் இல்லை என்று ஊகிக்க முடியாது. எனவே மேற்கூறிய அடிப்படையில் உயர் நீதிமன்றம் தண்டனையை இ.த.ச பிரிவு 302–ல் இருந்து இ.த.ச பிரிவு 304 பகுதி I–க்கு மாற்றியதில் பெரும் தவறு இழைத்துள்ளது. எனவே உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு வெளிப்படையாகவே முறைதிறம்பியது மற்றும் பதிவு செய்யப்பட்ட ஆதாரங்களுக்கு முற்றிலும் முரணானது என்று நாங்கள் கருதுகிறோம். தண்டனையை இ.த.ச பிரிவு 302–வது பிரிவிலிருந்து இ.த.ச பிரிவு 304 பகுதி I–க்கு மாற்றியதில்

உயர் நீதிமன்றம் பெரும் பிழைபுரிந்துள்ளது, எனவே, நீதி நலன் முற்றிலும் தோல்வியடைவதைத் தவிர்க்க, இந்த நீதிமன்றத்தின் தலையீடு இன்றியமையாததாக உள்ளது. மேற்கூறியவை மற்றும் மேலே கூறப்பட்ட காரணங்களுக்காக இந்த மேல்முறையீட்டை நாங்கள் அனுமதிக்கிறோம், உயர் நீதிமன்றத்தின் எதிர்ப்புக்குள்ளான தீர்ப்பை ரத்து செய்து இ.த.ச பிரிவு 302–ன் கீழ் குற்றம் சாட்டப்பட்டவரை குற்றவாளி என்று தீர்ப்பளிக்கும் விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்பை மீட்டளிக்கிறோம். கற்றறிந்த விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்பின்படி எதிர்மேல்முறையீட்டாளர் – குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்படுகிறது. குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு உயர்நீதிமன்றம் வழங்கிய எதிர்ப்புக்குள்ளான தீர்ப்பு மற்றும் உத்தரவின்படி தண்டனையை அனுபவித்து ஏற்கனவே விடுவிக்கப்பட்டு இருந்தால், எதிர்மேல்முறையீட்டாளர் – குற்றஞ்சாட்டப்பட்டவர் தனது தண்டனையை அனுபவிக்க உடனடியாக சரணடைய வேண்டும். [பத்தி 8.1, 9] [577–இ–எச்; 578–ஏ–சி]

<u>பார்வையிடப்பட்ட தீர்முடிவுகள்</u>

(2012) 11 எஸ்.சி.சி 592 குறிப்பிடப்படுகிறது பத்தி 4.4

(2012) 10 எஸ்.சி.சி 604 சாரப்படுகிறது பத்தி 7

(2010) 7 எஸ்.சி.ஆர் 1 சாரப்படுகிறது பத்தி 7

2019 (1) ஸ்கேல் 544 சாரப்படுகிறது பத்தி 7

குற்றவியல் மேல்முறையீட்டு அதிகார வரம்பு: குற்றவியல் மேல்முறையீடு எண் 645/2019

ஜோத்பூரில் உள்ள ராஜஸ்தான் உயர் நீதிமன்றத்தின் டி.பி. குற்றவியல் மேல்முறையீடு எண் 303/2009-இல், 23-5-2014 தேதியிட்ட தீர்ப்பு மற்றும் உத்தரவிலிருந்து.

திருமதி ஜோதி ஷர்மா, திருமதி பிராச்சி அகர்வால், ஜெயந்த் பாட்டியா மற்றும் திருமதி ருச்சி கோகஹ்லி, மேல்முறையீட்டாளர் சார்பு வழக்குரைஞர்கள்.

ரிஷப் சஞ்சேடி, திருமதி பத்மப்பிரியா, அஞ்சித் பண்டாரி மற்றும் கே. பாரிவேந்தன் எதிர்மனுதாரர் சார்பு வழக்குரைஞர்கள்.

நீதிமன்றத்தின் தீர்ப்பு நீதியரசர் திரு. எம்.ஆர்.ஷா அவர்களால் வழங்கப்பட்டது.

1. அனுமதி வழங்கப்பட்டது.

2. இந்த மேல்முறையீடானது குற்றவியல் மேல் முறையீட்டு எண் 303/2009-ல் 23-05-2014 தேதியிட்ட ராஜஸ்தான் உயர் நீதிமன்ற நீதியராயத் தீர்ப்பு மற்றும் உத்தரவிலிருந்து எழுகிறது. உயர் நீதிமன்றம், எதிர்மனுதாரர் தாக்கல் செய்த மேல்முறையீட்டை அனுமதிக்கும் போது, இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 302-க்கு பதிலாக, இ.த.ச. பிரிவு 304 பகுதி I-ன் கீழ் எதிர்மனுதாரருக்கு தண்டனை விதித்தது. உயர் நீதிமன்றம், எதிர்மனுதாரருக்கு 8 ஆண்டுகள் கடுங்காவல் சிறைத் தண்டனையும், ரூ.1000/- அபராதம் செலுத்தவும், அபராதம் செலுத்த தவறினால், ஒரு மாதம் சாதாரண சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டும் என்று உத்தரவிட்டது. அரசுத் தரப்பு இந்த தீர்ப்பிற்கு எதிராக மேல்முறையீடு செய்தது.

3. தலிப் குமார் என்ற ஒருவரால் நிம்பஹெடா காவல் நிலையத்தில் மு.த.அ. எண் 32/2008 பதிவு செய்யப்பட்டது.

26–01–2008 அன்று அ.சா.–5, திருமதி கைலாசி பண்ணையில் இருந்து திரும்பிக் கொண்டிருந்தபோது, அவளது முன்னிலையில் கன்ஹையா லால் ராஜூவின் (இறந்தவரை) தலையில் கோடரியால் தாக்கியதாக கூறப்பட்டது. அ.சா.–5–இன் கூற்றுப்படி, ராஜு கீழே விழுந்து, அவளது அலறலால் மற்றவர்கள் அந்த இடத்திற்கு வந்தடைந்தனர். குற்றம் சாட்டப்பட்டவர் தப்பி ஓடிவிட்டார். இதில் ராஜு படுகாயம் அடைந்தார். விசாரணையை முடித்தப் பின்னர், இ.த.ச பிரிவு 302–ன் கீழ் தண்டனைக்குரிய குற்றத்திற்காக விசாரணை அதிகாரி குற்றம் சாட்டப்பட்டவருக்கு எதிராக குற்ற ஆறிக்கை தாக்கல் செய்தார். குற்றம் சாட்டப்பட்டவர் குற்றத்தை மறுத்ததால், இ.த.ச பிரிவு 302–ன் கீழ் தண்டனைக்குரிய குற்றத்திற்காக கற்றறிந்த அமர்வு நீதிமன்றத்தால் விசாரிக்கப்பட்டார். அரசு தரப்பில் காய அறிக்கை (அ.சா.ஆ.–பி1) அளித்த ட அ.சா–1

மருத்துவர் கே. ஆசிப்; அ.சா.–5 திருமதி கைலாசி இறந்தவரின் பிரேதத்தை பரிசோதனை செய்து அறிக்கை அளித்த அ.சா–15 மருத்துவர் அனீஸ் அஹமது உள்பட 17 சாட்சிகள் விசாரிக்கப்பட்டனர். விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட சாட்சிகள் மூலம் அரசுத் தரப்பு காய அறிக்கை (அ.சா.ஆ. பி–1) மற்றும் பிரேத பரிசோதனை அறிக்கை உள்ளிட்ட சான்றாவணத்தை பதிவு செய்தது. அதன் பிறகு, குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் பிரிவு 313–ன் கீழ் குற்றம் சாட்டப்பட்டவரின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது, அதில் குற்றம் சாட்டப்பட்டவர், தான் பொய்யாக சிக்க வைக்கப்பட்டுள்ளதாக கூறினார். அதை எதிர்த்து குற்றஞ்சாட்டப்பட்டவரால் எந்த சான்று/ சாட்சியும் முன்னிலைப்படுத்தப்படவில்லை. அதன் பிறகு, சாட்சியத்தை மதிப்பீடு செய்ததன்பேரில், கற்றறிந்த அமர்வு நீதிமன்றம், இ.த.ச பிரிவு 302–ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றத்திற்காக

குற்றஞ்சாட்டப்பட்டவரை குற்றவாளி எனத் தீர்மானித்து, அவருக்கு ஆயுள் தண்டனையும், ரூபாய் 1000/– அபராதமும் விதித்ததுடன் செலுத்த தவறினால், மேலும் ஒரு மாத காலம் சாதாரண சிறைத் தண்டனையும் விதித்தது.

3.1 கற்றறிந்த அமர்வு நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட குற்றத் தீர்ப்பு மற்றும் தண்டனையால் மணக்குறையுற்று, அதிருப்தியுற்ற எதிர்மேல்முறையீட்டாளர்–அசல் குற்றம் சாட்டப்பட்டவர் குற்றவியல் மேல்முறையீடு எண் 303/ 2009 ஐ உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார். எதிர்ப்புக்குள்ளான தீர்ப்பு மற்றும் உத்தரவை மூலம், குற்றஞ்சாட்டப்பட்டவரால் தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீட்டை உயர் நீதிமன்றம் பகுதியாக அனுமதித்து, இ.த.ச பிரிவு 302–க்கு பதிலாக இ.த.ச பிரிவு 304 பகுதி I– ன் கீழ் குற்றம் சாட்டப்பட்டவரை குற்றவாளி என தீர்மானித்தது. எனவே, உயர் நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட

எதிர்ப்புக்குள்ளான தீர்ப்புரை மற்றும் உத்தரவை எதிர்த்து, இ.த.ச., பிரிவு 302–இன் கீழான தண்டனைத் தீர்ப்பை இ.த.ச., பிரிவு 304 பகுதி I–ஆக மாற்றியமைத்து மாநில அரசால் இந்த மேல்முறையீடு செய்யப்பட்டது. எனவே அரசின் தற்போதைய மேல் முறையீடானது குற்றம் சாட்டப்பட்டவரின் தண்டனையை இ.த.ச பிரிவு 302–ன் கீழ் வரும் தண்டனைக்கு பதிலாக இ.த.ச பிரிவு 304 பகுதி I–க்கு மாற்றிய உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு மற்றும் உத்தரவின் மீது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4. மேல்முறையீட்டாளர் ராஜஸ்தான் மாநில அரசு சார்பாக ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர், வழக்கின் பொருண்மைகள் மற்றும் சூழ்நிலைகளை கருத்தில் கொண்டு, குற்றம் சாட்டப்பட்டவரின் தண்டனையை இ.த.ச பிரிவு 302–லிருந்து பிரிவு 304 பகுதி I–க்கு மாற்றியதில் உயர்

நீதிமன்றம் பெரும் தவறு இழைத்து விட்டது என கடுமையாக சமர்ப்பித்தார்.

4.1 இ.த.ச. பிரிவு 302–லிருந்து பிரிவு 304 பகுதி I–க்கு தண்டனையை மாற்றும்போது உயர்நீதிமன்றம் அளித்த முக்கிய காரணம் யாதெனில், இறந்தவர் அவரது தலையில் ஏற்பட்ட ஒரே காயத்தால் இறந்தார் என்று கூறியிருப்பதை மேல்முறையீட்டாளர்–மாநிலத்தின் சார்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் கடுமையாகச் சாடுகிறார். இருப்பினும் குற்றம் சாட்டப்பட்டவர் கோடரி போன்ற கொடிய ஆயுதத்தால் உடலின் முக்கிய பகுதியான தலையில் அடித்தார் என்ற சங்கதியை உயர்நீதிமன்றம் கருத்தில் கொள்ளவில்லை. மருத்துவச் சான்றுப்படி, தலையில் ஏற்பட்ட காயம் இயல்பான போக்கில் மரணத்தை ஏற்படுத்த போதுமானதாக இருந்தது. எனவே, உயர் நீதிமன்றம் தண்டனையை இ.த.ச. பிரிவு 302–

லிருந்து இ.த.ச.பிரிவு 304 பகுதி I–க்கு மாற்றியது நியாயம் இல்லை என்று சமர்ப்பிக்கப்பட்டது.

4.2. மேலும் மேல்முறையீட்டாளர் சார்பாக ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் சமர்ப்பித்தது யாதெனில், குற்றம் சாட்டப்பட்டவருக்கும் இறந்தவருக்கும் இடையே தகராறு இருந்தது என்றும் எனவே வழக்கின் சூழ்நிலையிலிருந்து, குற்றஞ்சாட்டப்பட்டவர்–மேல்முறையீட்டாளரின் சார்பாக இறப்பு ஏற்படுத்துவதற்கான எந்த உட்கருத்தும் இல்லை என்று உயர்நீதிமன்றம் மற்றொரு காரணத்தை அளித்தது. எவ்வாறாயினும் சம்பவம் நடந்த நேரத்தில், எந்த ஒரு வாய்தகராறும் இல்லை என்றும், வாய் தகராறானது சம்பவம் நடைபெறுவதற்கு சில மணி நேரங்களுக்கு முன்பு ஏற்பட்டது என்றும், சம்பவம் நடந்த நேரத்தில் அல்ல என்பதை உயர் நீதிமன்றம் கருத்தில் கொள்ள/மீண்டும் பரிசீலிக்கத் தவறிவிட்டது என்றும் சமர்பிக்கப்பட்டது.

4.3 வழக்கின் பொருண்மைகள் மற்றும் சூழ்நிலைகளிலிருந்தும், இறந்தவருக்கு ஏற்பட்ட காயங்களிலிருந்தும், அது இ.த.ச. பிரிவு 300–ன் வரையறைக்குட்பட்ட கொலை வழக்கு என்பது தெளிவாகிறது என்றும், அவ்வாறே கற்றறிந்த அமர்வு நீதிமன்றம், குற்றஞ்சாட்டப்பட்டவரை இ.த.ச. பிரிவு 302–ன் கீழான குற்றத்திற்கு தண்டித்தது சரியே என்று மேல்முறையீட்டாளர் சார்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் சமர்ப்பித்தார். உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு வெளிப்படையாகவே விபரீதமானது என்றும், பதிவுறக்களிலுள்ள சான்றாதாரத்திற்கு அது முரணானது என்றும், எனவே இந்த நீதிமன்றத்தின் குறுக்கீடு தேவையானது என்றும் மேல்முறையீட்டாளர் சார்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞரால் சமர்ப்பிக்கப்பட்டது.

4.4 மேற்கூறிய சமர்ப்பிப்புகளுடன், அருள்ராஜ் எதிர் இந்திய ஒன்றிய அரசு (2010)6 எஸ்.சி.சி457; அசோக் குமார் மகபாய் வங்கர் எதிர் குஜராத் மாநில அரசு (2011)10 எஸ்.சி.சி.604; விஜய் ராமகிருஷ்ண கேய்க்வாட் எதிர் மகாராஷ்டிரா அரசு (2012)11 எஸ்.சி.சி 592 ஆகிய வழக்குகளில் இந்த நீதிமன்றத்தின் முடிவுகளை சார்ந்தும், ராஜஸ்தான் அரசு எதிர் லீலா ராம் என்கிற லீலா தார் என்ற 13–12– 2018 தேதியிட்ட குற்றவியல் மேல்முறையீட்டு எண் 1441/2013 என்ற சமீபத்திய வழக்கில் இந்த நீதிமன்றத்தில் தீர்ப்பையும் சார்ந்தும் தற்போதைய மேல்முறையீட்டை அனுமதிக்கமாறும், உயர்நீதிமன்றத்தின் எதிர்ப்புக்குள்ளான தீர்ப்பு மற்றும் உத்தரவை ரத்து செய்யுமாறும் கற்றறிந்த அமர்வு நீதிமன்றத்தின் உத்தரவையும், தண்டனை தீர்ப்பையும், உத்தரவையும் மீட்டெடுக்கு மாறும் வேண்டுரைக்கப்பட்டது.

5. எதிர்மனுதாரர்–அசல் குற்றஞ்சாட்டப்பட்டவர் சார்பாக ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் தற்போதைய மேல்முறையீட்டை எதிர்க்கும் போது, கடுமையாக சமர்ப்பித்தது யாதெனில், குற்றம் சாட்டப்பட்டவரின் தண்டனையை இ.த.ச பிரிவு 302–லிருந்து பிரிவு 304 பகுதி I–க்கு மாற்றும் போது, உயர் நீதிமன்றம் நியாயமான காரணங்களை வழங்கி, தொடர்புடைய சூழ்நிலைகளை கருத்தில் கொண்டு, அதன் பிறகு குற்றம் சாட்டப்பட்டவரின் நோக்கம் இறந்தவரின் மரணத்தை ஏற்படுத்துவதாகக் கூற முடியாது என்ற முடிவுக்கு வந்துள்ளது. உயர் நீதிமன்றம் தொடர்புடைய சூழ்நிலைகளை பரிசீலித்த பிறகு தண்டனையை இ.த.ச பிரிவு 302–லிருந்து இ.த.ச பிரிவு 304 பகுதி I–க்கு மாற்றியமைத்தது , எனவே இந்த நீதிமன்றம் தலையீடு தேவையில்லை என்றும் சமர்பிக்கப்பட்டது.

6. தொடர்புடைய தரப்பினர்களுக்காக முன்னிலையான கற்றறிந்த வழக்குரைஞர்களின் நீண்ட வாதங்கள் கேட்கப்பட்டன

6.1 கற்றறிந்த அமர்வு நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட தீர்ப்பு மற்றும் உத்தரவு மற்றும் உயர் நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட எதிர்ப்புக்கு உள்ளான தீர்ப்பு மற்றும் உத்தரவு ஆகியவற்றையும் விரிவாகப் பரிசீலித்தோம். கற்றறிந்த இந்த அமர்வு நீதிமன்றம் குற்றஞ்சாட்டப்பட்டவரை இ.த.ச பிரிவு 302–ன் கீழ் குற்றவாளி என்று தீர்மானித்தது. இருப்பினும் குற்றம் சாட்டப்பட்டவர் தாக்கல் செய்த மேல்முறையீட்டில், உயர்நீதிமன்றம் தண்டனையை இ.த.ச பிரிவு 302–லிருந்து இ.த.ச பிரிவு 304 பகுதி I–க்கு மாற்றியமைத்தது. அவ்வாறு செய்யும் போது, உயர் நீதிமன்றம் பத்தி 15 ல் பின்வரும் காரணங்களைக் கூறியுள்ளது:

"15. வழக்கின் சூழ்நிலையிலிருந்து , குற்றஞ்சாட்டப்பட்ட கன்ஹையா லால் கோடரியால் தலையில் அடித்த ஒரு காயத்தின் காரணமாக ராஜ்மல் இறந்தார் என்பது சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளது. மீண்டும் மீண்டும் காயம் ஏற்படவில்லை என்பதும் ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதியாகும், மேலும் சம்பவத்தன்று காலையில், குற்றம் சாட்டப்பட்டவருக்கும் இறந்தவருக்கும் இடையே வாய் தகராறு ஏற்பட்டதாகவும், எனவே வழக்கின் சூழ்நிலையில் குற்றம் சாட்டப்பட்டவர்/ மேல் முறையீட்டாளர் தரப்பில் மரணத்தை ஏற்படுத்தும் நோக்கம் இல்லை என்றும் கூறலாம், ஆனால் மரணத்தை ஏற்படுத்திய செயல், மரணத்தை ஏற்படுத்தக் கூடிய உடல் காயத்தை ஏற்படுத்தும்

நோக்கத்துடன் செய்யப்பட்டதாக தெரிகிறது, எனவே அவரது தண்டனை இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 302–ல் இருந்து இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 304 பகுதி I–க்கு மாற்றியமைக்க தகுதியானது".

6.2 தண்டனையை இ.த.ச பிரிவு 302–ல் இருந்து இ.த.ச பிரிவு 304 பகுதி I–க்கு மாற்றியிமைக்கும் பொழுது, உயர் நீதிமன்றத்தால் அளிக்கப்பட்ட முக்கிய காரணவிளக்கம் யாதெனில், ஒரே அடி அளித்தது குறித்ததாகும், குற்றஞ்சாட்டப்பட்டவர் இறந்தவரின் தலையில் கோடரியால் ஒரே அடி கொடுத்ததன் காரணமாக அவருக்கு காயம் ஏற்பட்டு இறந்துவிட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. மேற்கூறியவை இ.த.ச பிரிவு 302–ல் இருந்து 304 பகுதி I–க்கு தண்டனையை மாற்றுவதற்கான ஒரு காரணமாக இருக்க முடியாது.

6.3 அருண் ராஜ் (மேற்கூறிய) வழக்கில் இந்த நீதிமன்றம் கவனித்ததும் முடிவெடுத்தது யாதெனில், ஒருமுறை அடி அடிக்கப்படும் போதெல்லாம் பிரிவு 302 ஈர்க்கப்படாது என்பதான நிலையான விதி எதுவும் இல்லை. பயன்படுத்தப்பட்ட ஆயுதத்தின் தன்மை மற்றம் அடி விழுந்த உடலின் முக்கிய பகுதி ஆகியவை இறந்தவருக்கு மரணத்தை விளைவிக்கும் உட்கருத்து குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு இருந்தது என்பது நியாயமான சந்தேகத்திற்கு அப்பால் நிரூபிக்கப்பட்டது என்பது மேற்படி தீர்முடிவிலிருந்து இந்நீதிமன்றத்தால் கருத்துரைக்கப்பட்டது. மேலும், ஆக்கக்கூறுகள் நிரூபிக்கப்பட்டு விட்டால் அது ஒருமுறை அடிக்கப்பட்ட அடியா அல்லது பலமுறை அடிக்கப்பட்ட அடியா என்பது தேவையற்றது என்று கருத்துரைக்கப்பட்டது .

6.4 அசோக் குமார் மகபாய் வங்கர் (மேற்கூறிய) வழக்கில் இறந்தவரின் தலையில் உலக்கையால் அடிக்கப்பட்ட ஒரே அடியால் மரணம் ஏற்பட்டது. இறந்தவரின் தலை சுக்குநூராக உடையும் அளவுக்கு குற்றஞ்சாட்டப்பட்டவர் உலக்கையை கொண்டு பலமான அடித்தார் என்று காணப்பட்டது. இந்த வழக்கு இ.த.ச பிரிவு 302–ன் கீழ் வருமா அல்லது பிரிவு 300 விதிவிலக்கு 4–ன் கீழ் வருமா என்பதை இந்த நீதிமன்றம் பரிசீலித்தது. இறந்தவருக்கு ஏற்பட்ட காயம், இறந்தவருக்க மரணத்தை விளைவிக்கும் காயம் ஏற்படுத்தும் உட்கருத்து குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு இருந்தது மட்டுமல்லாமல், குற்றஞ்சாட்டப்பட்டவர் அதை அறிந்தே செய்தார் என்பதையும் வெளிப்படுத்துகிறது என்று இந்நீதிமன்றத்தால் தீர்மானிக்கப்பட்டது. அவ்வாறான தாக்குதல் இறந்தவருக்கு மரணத்தை ஏற்படுத்துவதை தவிற வேறொன்றும் இல்லை

என்று மேலும் கருத்துரைக்கப்பட்டது. எந்த ஒரு நியாயமான நபரும் எந்த ஒரு கற்பனை திறனுடனும் அத்தகைய ஆயுதத்தால் உடலின் முக்கியமான பகுதியில் இத்தகைய காயம் மரணத்தை ஏற்படுத்தும் என்று முடிவுக்கு வர முடியும் என்று கருத்துரைக்கப்பட்டது .

6.5 லீலா ராம் என்கிற லீலா தார் (மேற்கூறிய) சமீபத்திய வழக்கின் தீர்ப்பிலும், இந்தப் பிரச்சனையில் இந்த நீதிமன்றத்தின் முடிவுகளை பரிசீலித்த பிறகும், அதாவது ஒரு அடியால் ஏற்பட்ட காயத்தினால் ஏற்பட்ட வழக்கு இ.த.ச பிரிவு 302 –ன் கீழ் வருமா அல்லது பிரிவு 304 பிரிவு I–ன் கீழ் வருமா அல்லது பிரிவு 304 பகுதி II–ன் கீழ் வருமா என்று பரிசீலித்த பின்னரும், இந்த நீதிமன்றம் உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பை மாற்றி அமைத்தது, (அந்த வழக்கில் ராஜஸ்தான் உயர் நீதிமன்றத்தின் எதிர்ப்புக்கு உள்ளான இறுதி தீர்ப்பு) குற்றம் சாட்டப்பட்டவரை இ.த.ச பிரிவு 302–ன் கீழ்

குற்றத்திற்காக தண்டித்தது. அதே தீர்ப்பில் இந்த நீதிமன்றம் இ.த.ச பிரிவு 300 விதிவிலக்கு 4–ஐயும் பரிசீலித்து, பத்தி 21–இல் கீழ்க்கண்டவாறு கருத்துரைத்தது :

> "21. விதிவிலக்கு 4–ன் கீழ், அந்த விதியில் உள்ள நிபந்தனைகள் நிறைவேற்றப்பட்டால், குற்றமற்ற கொலை ஒரு கொலை அல்ல. அவை (i) முன்திட்டமிடல் இன்றி செய்யப்பட்ட செயல்; (ii) திடீர் சண்டை நடந்தது; (iii) திடீர் சண்டையின் காரணமாக உணர்ச்சி வேகத்தால் செய்யப்பட்ட செயலாக இருக்க வேண்டும்; மற்றும் (iv) குற்றவாளி தேவையற்ற அனுகூலங்களைப் பெறவில்லை அல்லது கொடூரமான அல்லது அசாதாரணமான முறையில் செயல்படவில்லை".

7. மேற்கூறிய தீர்ப்புகளில் இந்த நீதிமன்றம் வகுத்துள்ள சட்டத்தை தற்போது உள்ள வழக்கின் பொருண்மைகளுக்கு பயன்படுத்தியும், பிரிவு 302–இல் இருந்து பிரிவு 304 பகுதி I–க்கு மாற்றும்போது உயர்நீதிமன்றம் வழங்கிய நியாயங்கள் மற்றும் எதிர்ப்புக்குள்ளான இறுதி தீர்ப்புரை மற்றும் உத்தரவு பத்தி 15–ல் கூறப்பட்டுள்ள காரணங்களை வைத்தும், உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பு வெளிப்படையாக முறைதிறம்பியது, மற்றும் பதிவுறுக்களிலிருந்து முற்றிலும் முரணானது என்று நாங்கள் உறுதியாக கருதுகிறோம். அ.சா.–1, மருத்துவர் கே. ஆசிப்– பின் சாட்சி வாக்குமூலத்தின் படி, இறந்தவருக்கு பின்வரும் காயங்கள் ஏற்பட்டன:

> "1. 7 செ.மீ × 0.5 செ.மீ அளவுக்கு தோலின் ஆழமாக தலையின் நடுப்பகுதி எலும்பு தெரிகிற அளவுக்கு வெட்டுக்காயம்.

2. வலது காலின் நடுப்பகுதியில் 1 செ.மீ × 0.5 செ.மீ சிராய்ப்புக் காயம்".

அ.சா.–15, மருத்துவர் அனீஸ் அகமதுவின் கூற்றுப்படி மண்டை ஓட்டின் இணைப்பு எலும்பிலும், பின்புற எலும்பிலும் 4 செ.மீ நீளமுள்ள எலும்பு முறிவு காணப்பட்டது. தலையில் ஏற்பட்ட காயம் இயல்பான முறையில் மரணத்தை ஏற்படுத்த போதுமானது என்றும் அவர் கூறினார். எனவே, குற்றம் சாட்டப்பட்டவர், உடலின் முக்கிய பகுதியான தலையில் கொடிய ஆயுதமான கோடரியை பயன்படுத்தி பலமாக அடித்ததால் மரணம் ஏற்பட்டது என்பது நிரூபிக்கப்பட்டது.

8. உயர் நீதிமன்றம் கூறிய மற்றொரு காரணம் என்னவென்றால் மீண்டும் மீண்டும் காயம் ஏற்படவில்லை என்பதாகும். தண்டனையை இ.த.ச பிரிவு 302–ல் இருந்து பிரிவு 304 பகுதி I–க்கு மாற்றுவதற்கு மேற்கூறியவை அரிதான காரணமாகவே இருக்க முடியும். தலை போன்ற

உடலின் முக்கிய பாகத்தின் மீது அடித்த ஒரு அடி, அதுவும் கொடிய ஆயுதமான கோடரியை பலமாக பயன்படுத்தப்பட்ட என்பது மரணத்தை நிரூபித்தது மற்றும் இ.த.ச பிரிவு 300–ன் வரையறைக்குள் இது ஒரு கொலை வழக்கு என்று கருத போதுமானதாகும்.

8.1 உயர் நீதிமன்றம் வழங்கிய மற்றொரு காரணம் என்னவென்றால், சம்பவத்தன்று காலையில், குற்றம் சாட்டப்பட்டவருக்கும் இறந்தவருக்கும் இடையே வாய்ச்சண்டை ஏற்பட்டது. எனவே வழக்கின் சூழ்நிலையில் மரணத்தை ஏற்படுத்தும் உட்கருத்து ஏதும் இல்லை என்று குற்றம் சாட்டப்பட்டவரின் தரப்பில் கூறலாம். ஆனால் மரணம் எதனால் ஏற்பட்டது என்ற உண்மை மரணத்தை ஏற்படுத்தக்கூடிய உடல் காயத்தை ஏற்படுத்தும் நோக்கத்தை நிலைநிறுத்துவதாக தோன்றுகிறது. மேற்கூறியவை பதிவில் உள்ள சான்றுகளுக்கு முரணானது. குற்றம் நடந்த போது

குற்றம் சாட்டப்பட்டவருக்கும் இறந்தவருக்கும் இடையே வாய்ச்சண்டை ஏற்பட்டது என்பது குற்றம் சாட்டப்பட்டவர் சார்பாக ஒரு வழக்கு அல்ல என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். வாய்ச்சண்டை ஏதேனும் இருந்தால், காலையிலும் சம்பவம் நடந்த நேரத்தை விட மிகவும் முன்னதாகவும் நடந்துள்ளது. இந்த தகராறு மிகவும் முன்னதாகவே நடந்திருக்க கூடும் என்பதாலும், அதற்கு உடனடியாக முன் மற்றும் அல்லது குற்றம் நடந்த சமயத்திலும் அல்ல என்பதால், இறந்தவருக்கு மரணத்தை விளைவிக்க குற்றம் சாட்டப்பட்டவருக்கு எந்த உட்கருத்தும் இல்லை என்று ஊகிக்க முடியாது. எனவே மேற்கூறிய அடிப்படையில் உயர் நீதிமன்றம் தண்டனையை இ.த.ச பிரிவு 302-ல் இருந்து இ.த.ச பிரிவு 304 பகுதி I-க்கு மாற்றியதில் பெரும் தவறு இழைத்துள்ளது. எனவே உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு வெளிப்படையாகவே முறைதிறம்பியது மற்றும் பதிவு

செய்யப்பட்ட ஆதாரங்களுக்கு முற்றிலும் முரணானது என்று நாங்கள் கருதுகிறோம். தண்டனையை இ.த.ச பிரிவு 302–வது பிரிவிலிருந்து இ.த.ச பிரிவு 304 பகுதி I–க்கு மாற்றியதில் உயர் நீதிமன்றம் பெரும் பிழைபுரிந்துள்ளது, எனவே, நீதி நலன் முற்றிலும் தோல்வியடைவதைத் தவிர்க்க, இந்த நீதிமன்றத்தின் தலையீடு இன்றியமையாததாக உள்ளது.

9. மேற்கூறியவை மற்றும் மேலே கூறப்பட்ட காரணங்களுக்காக இந்த மேல்முறையீட்டை நாங்கள் அனுமதிக்கிறோம், உயர் நீதிமன்றத்தின் எதிர்ப்புக்குள்ளான தீர்ப்பை ரத்து செய்து இ.த.ச பிரிவு 302–ன் கீழ் குற்றம் சாட்டப்பட்டவரை குற்றவாளி என்று தீர்ப்பளிக்கும் விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்பை மீட்டளிக்கிறோம். கற்றறிந்த விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்பின்படி எதிர்மேல்முறையீட்டாளர் – குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்படுகிறது.

குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு உயர்நீதிமன்றம் வழங்கிய எதிர்ப்புக்குள்ளான தீர்ப்பு மற்றும் உத்தரவின்படி தண்டனையை அனுபவித்து ஏற்கனவே விடுவிக்கப்பட்டு இருந்தால், எதிர்மேல்முறையீட்டாளர் – குற்றஞ்சாட்டப்பட்டவர் தனது தண்டனையை அனுபவிக்க உடனடியாக சரணடைய வேண்டும்.

10. இந்த உத்தரவின் நகல், சம்பந்தப்பட்ட தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவருக்கு உச்ச நீதிமன்ற அலுவலகத்தால் அனுப்பப்படவேண்டும்.

மேல்முறையீடு அனுமதிக்கப்படுகிறது.

<u>பொறுப்புத் துறப்பு</u>

"வட்டார மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்ட இத்தீர்ப்புரையானது, வழக்காடி, தன்னுடைய மொழியில் புரிந்துகொள்வதற்கும் பயன்படுத்திக் கொள்வதற்கும் உட்பட்டதேயன்றி, வேறெந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்திக்கொள்ளலாகாது. அனைத்து நடைமுறையான மற்றும்

அலுவல்முறையான நோக்கங்களுக்கும் மற்றும் தீர்ப்புரையை நிறைவேற்றலுக்கும், செயற்படுத்தலுக்கும் அதன் ஆங்கிலப் பதிப்பே அதிகாரப்பூர்வமானதாகும்."